# கொந்தளிப்பு

குறுங்காவியம்



பாலமுனை பாறூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொந்தளிப்பு

குறுங்காவியம்

பாலமுனை பாறூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொந்தளிப்பு - குறுங்காவியம் -

Konthalippu ϕ © Author - Palamunai Farook ϕ First Edition - october 2010 ϕ Address - Farzana Manzil, Palamunai - 03 . Tel - 071 8035305 ϕ Type Setting - M.F. Farhath ϕ Cover Design & Layout - Nawas Sawfi ϕ Printed - Nalluravu Publication - Sainthamaruthu ϕ Pages - 96 ϕ Price - 200/=

ISBN : 978 - 955 - 99311 - 1 - 9

15.07.2010 இல் வபாத்தான

எனது மாமனார்

அல்ஹாஜ் ஏ.ஏ.யூ. லெப்பை - அதிபர்

(அக்பர் மாஸ்டர்) அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் பாலமுனை பாறூக்கின் கொந்தளிப்பு குறுங்காவியம் காலத்தைப் பிரதிபலிக்கும் சிறந்த கலைப்படைப்பு

எழுபதுகளின் ஆரம்பத்தில் "புதிய பறவையாக" தன்னை இனம்காட்டி எழுதத் தொடங்கிய கவிஞர் பாலமுனை பாறூக் பலராலும் அறியப்பட்டவர். இவர் நான்கு தசாப்தங்களாகக் கவிதை உலகில் தடம் பதித்து வருகிறார். "பதம்" "சந்தனப் பொய்கை" ஆகிய இரு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டு பரந்த இலக்கிய நெஞ்சங்களைக் கவர்ந்ததோடு பல கவியரங்குகளிலும் பங்குபற்றிச் சிறப்பித்தவர். பரிசுகளும் பாராட்டும் பெற்றவர்.

தாயக மண்ணை நேசித்து. அம்மண்ணிலே வாழும் மக்களின் வாழ்வியலை தனது அனுபவ வெளிப்பாடாகக் காவியம் படைத்துள்ள இவர். மரபுக்கவிதைகளோடு மரபை மீறிய புதுக்கவிதைகளையும். சந்தம் தழுவிய கவிதைகளையும் எழுதி இலக்கிய உலகில் பேசப்படுகின்ற கவிஞராக விளங்குகின்றார். இவரின் "கொந்தளிப்பு" என்னும் குறுங்காவியம் காலத்தோடு ஒட்டி வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

பெருங்காவியங்கள் தோன்றுவதற்குச் சாத்தியமற்ற இக்காலத்தில் சமகாலப் பிரச்சினைகளை உள்ளடக்கிய தரமான ஒரு குறுங்காவியம் எழுதித்தரும் கவிஞர் செம்மொழியான நம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிபவர் ஆவார்.

இயந்திர வேகத்திலே வாழ்க்கைப் பயணத்தைக் களிக்கின்ற மக்கள். எடுத்த எடுப்பிலே காவியத்தை முழுமையாகப் படித்துச் சுவைக்கவும் ஆழமாய் மீண்டும் நயம் காணவும் கண்டவற்றை எடுத்துக் கூறவும் குறுங்காவியங்கள் வசதியாக அமையும். ஆதலால் நம் கவிதைப் பரப்பு ஆழமும் விரிவும் அடையவும் குறுங்காவியங்கள் நம்மண்ணிலே தோன்றவும் வழிவிடுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான கவிதைகளைப் படைக்கின்ற ஒரு கவிஞனுக்கு உறுதிப்பாடும், தன் நம்பிக்கையும் மிக அவசியம். வஞ்சகத்தனமான விமர்சனத் தூறல்களுக்குப் பின்வாங்காமால் தன் எழுத்துப் பணியை பூரண உற்சாகத்தோடு தொடர்பவனே தமிழில் வெற்றிகளை நிலை நாட்டும் கவிஞனாக மிளிர்வான்

கால மாற்றங்களுக்கேற்ப புதியது படைப்பவன் உருவ உள்ளடக்கங்களில் நெகிழ்வுகளையும் மாற்றங்களையும் ஏற்படுத்தல் சகஜமே. அதற்கமைய பாலமுனை பாறூக் இக் கொந்தளிப்புக் குறுங்காவியத்தைப் படைத்துள்ளார். வயது முதிர்ந்த மரியாதைக்குரிய ஏழை விவசாயியான ஆதம் காக்காவின் மனக் கொந்தளிப்புக்கள் பல்வேறு காட்சிகளில் துலாம்பரமாகப் பளிச்சிடுகின்றன. படிப்பவர் தமது மனக்கண்ணிலே அவற்றைத் தெளிவாகக் கண்டு ரசிக்கக் கூடியதாக இக்காவியம் அமைந்திருப்பது மெச்சத்தகுந்தது.

உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஆதம்காக்கா பூரணை நாளில் பொங்கும் இனிய மாலைப் பொழுதில் மக்களோடு மக்களாகச் சொந்த ஊர்க் கடற்கரையில் அமர்ந்திருந்து தனது கடந்த கால துயர நினைவுகளில் மூழ்கிச் சோர்ந்த நிலையில் தன் இருப்பிடம் நாடிச் செல்ல மழையும் வருகிறதுதனது தகரக் கொட்டில் தாழ்வாரத்திலே ஒதுங்கிக் கொள்வதாகக் காவியம் படைக்கப்பட்டுள்ளது. இது யதார்த்த நிலையின் சித்தரிப்பெனலாம்.

தென்கிழக்கு முஸ்லிம் சமூகத்தின் முப்பது வருடங்களுக்கு முந்திய ஒட்டுறவுள்ள சீரான வாழ்க்கை, சுனாமி அடித்ததாலும், துறைமுகம் அமைத்ததாலும், வேளாண்மை வெட்டும் மெசின் வந்து வட்டைக்குள் இறங்கியதாலும் முற்று முழுதாக சிதைந்து போனதை எண்ணி ஆதம் காக்காவின் மனம் கொந்தளிப்பது இயல்பானதாகக் காட்டப்பட்டுள்ளது. அவரின் அகக் குமுறல் காட்சிகளால் காவியத்தின் காலம், வெளி என்பன தெளிவாகப் புலப்படுகின்றது.

> "ஆழிக் கடலெனும் அழகுப் பெண்ணாள்
> நீலச் சேலை அணிந்தே இருந்தாள்
> வெள்ளைக் கரையோடு வண்ணச்சேலை".

காவியம் ஆரம்பிக்கிறது.

> "பூரணை நிலவில் ஆடவர் பெண்டிர் அருகருகு இருந்து
> கூடிக்களிக்கவும், உண்ணவும், பருகவும்,
> ஒளியில் நனையவும் எத்தனையோ பேர் கடற்கரை வருகிறார்"

> "ஆதம்காக்கா தனியே ஓரமாய்,
> ஒற்றைத் தென்னையின் கீழே அமர்ந்து கொள்கிறார்"

> "பொந்தில் இருந்து புறப்பட்டாங்கொரு நன்டு நடந்து திரிந்தது"
> பிள்ளைகள் மணல் வீடு கட்டி விளையாடுகிறார்கள்,

> "ஒரு வீட்டை மற்றொரு பிள்ளை எட்டி உதைத்ததும்,
> அடுத்த பிள்ளை அழிந்தது வீடென
> விழுந்து புரண்டு விம்மி அழுகிறது"

> "மழையொன் றடித்தது மனசில்! நனைந்தார் காக்கா!"

ஆழிப் பேரலை அனர்த்தத்தால், மனைவி மக்களைப் பறி கொடுத்ததையும் ஏற்பட்ட துன்ப துயரங்களையும், நிவாரணம் வழங்கலின் அநீதிகளையும் ஆதம் காக்கா நினைத்துப் பார்க்கிறார்"

> "உள்ளூர் வெளியூர் நிறுவனமெல்லாம்
> உதவிகள் புரிந்தன; உண்மைதான்
> ஆயின் இல்லாதவர்களும்,
> இழந்தவர்களுமா? எல்லாவற்றையும்
> பெற்றெடுத்தார்கள்?
> நெத்தலிக் கென்று போட்ட இரையை
> சுறாக்கள் வந்து சுருட்டிக் கொண்டதே"

சமூக அநீதிகளைக்கண்டு மனச்சாட்சி உள்ள இதயம் கொதிக்கவே செய்யும். ஆதம் காக்காவின் வேதனை நியாயமானதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு துறைமுகம் அமைக்கப்பட்ட போது தமது கடற்கரைப் பிரதேசத்தின் இயற்கை அழகுகள் சிதைக்கப்பட்டதையும், வழமையான மீன்பிடித் தொழில்கள் கைதவறி விட்டதையும், வேளாண்மை வெட்டும் மெசின் பாவனைக்கு வந்ததும் பிரதேச கூலி விவசாயிகளின் தொழில்கள் அடிபட்டுப் போனதையும், பழைய கலகலப்பான வாழ்க்கை
மறைந்ததையும் எண்ணி எண்ணி மனம் வருந்தும் பிரதேசப் பற்றாளரான ஆதம் காக்காவின் சிந்தனைகளின் ஊடாக குறித்த முஸ்லீம் மக்களின் வாழ்க்கைக் கூறுகள் நலிவடைந்ததையும் படிப்பவர் மனதைக் கவரக் கூடியதாகக் கவிதையில் சித்தரித்துப் பதிவு செய்திருக்கும் கவிஞரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

கடற்கரையில் ஒரு பிள்ளையின் மணல் வீட்டை மறு பிள்ளை பாய்ந்து உதைத்துக் கெடுத்த போது சுனாமி செய்த அழிவினையும், "காத்து வாங்கவா காக்கா" என்று ஒருவர் கேட்டதும், துறைமுக அமைப்பால் கடற்கரையின் இயற்கை அழகு சிதைக்கப்பட்டு மீன்பிடித் தொழில்கள் இல்லாமற் போனதையும், "வெள்ளாம நாளைக்கு வெட்டுறாக்கா?" எனக் கேட்டவுடன்....

காடு வெட்டிப் பேமிற் எடுத்தும் பாசனமின்றிப் பயனற்றுப் போனதையும், அரிவி வெட்டும் மெசின் வந்து விவசாயத் தொழிலாளர்களை அரித்துக் கொன்றதையும். தந்தையின் கரத்தைப் பிடித்துக் கொண்டு பேசிச் சிரித்து ஒரு பிள்ளை அங்கே செல்வதைப் பார்த்து பதின் மூன்று வயதில் தன் வாப்பாவுடன் வட்டைக்குள் சென்று தான் கண்ட இனிய காட்சிகளையும், பற்றைக்குள் இருந்து ஏதோ பாய்ந்த போது, பன்றி வயலில் பாய வருவதும் அதற்கு தீநாப் போட்டு காவல் புரிந்ததும் ஆதம் காக்காவின் நினைவில் வருகின்றது. அவரின் பழைய நினைவுகளை சில சிறு நிகழ்வுகள் இலகுவாகத் தூண்டி வெளிக்கொண்டு வருவது இயல்பான நிகழ்வுகளாய் அமைந்து காவியத்துக்கு தனிச் சிறப்பைத் தருகின்றது.

கவிஞனின் படைப்பினை வாழ வைப்பதும் அவன் ஆளுமையைத் துலங்க வைத்து நிலை நிறுத்துவதும் அவன் எழுப்பிக்காட்டும் படிமங்களும் கவித்துவம் நிறைந்த அழகிய தொடர்களுந்தான் இந்த அளவீட்டில் பாலமுனை பாறூக் இக்காவியத்தில் தன்னை உறுதியாக நிலைநாட்டி இருக்கின்றார்.

துறைமுகவேலை தொடங்கியதும் மீன் பிடியாளர் அகற்றப்பட்டு கரைவலை மீன்பிடி அற்றுப் போயிற்று. இதை நினைந்து உள்ளம் வருந்தும் போது,

"ஊரே திரண்டு நிற்பதைப் போல
காலை வேளையில் கடற்கரை இருக்கும்!
கந்தூரி கொடுக்கும் பள்ளிகள் போல
காட்சி தருமே கடற்கரை அன்று"
என ஏங்குகிறார் காக்கா.

இரவு மீன் பிடியைச் சொல்லும் போது,

"அரிக்கன் லாம்பின் சிறு சிறு வெளிச்சம்...
ஆழ்கடல் மீன்பிடி,
இருக்கும் கடலும் வானமாய் மாறும்!
சிமிட்டும் தாரகை கடலினில் தோன்றும்!"

"கடலை வனப்பை தொழிலை இழப்பை நினைக்க நினைக்க
கடலின் உப்பாய்க் கசிந்தது கண்ணீர்!" என்கிறார்.

பன்றி வயலில் பாய்ந்து அழித்து விடாமல் காவல் செய்யும் போது,

"பறணில் மேலே உயரக் கம்பில்
கணவா லாம்பின் வெளிச்சம்
கொடியேற்றப் பள்ளியின் மினரா போல
தெரியும் வட்டைகள் எல்லாம்."

என்னும் வரிகள் மனக்கொந்தளிப்பின் உச்சமாகவும், கலைத்துவமான முககிய படப்பிடிப்புகளாகவும் விளங்குகின்றன. இக்காவியத்தில் தற்கால அரசியலையும், ஐக்கியத்தையும் கோடிட்டுக் காட்டியுள்ளார் கவிஞர்.

"இலங்கைத்தாயின் பிள்ளைகள் நாமே
இதனால்
இணைந்து வாழ்வதை எவர்தான் வெறுப்பார்?
இனம் மதம் மொழியெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் நமது தனித்துவத்தோடு
அனைவரும் இணைந்து
புரிந்துணர்வோடு
அதிகாரங்களைச் சமமாய்ப் பகிர்ந்து
வாழ்வதைத்தனே விரும்பிக் கேட்கிறோம்
தவறா? தப்பா? நியாய மில்லையா?
உரத்த குரலில் ஓங்கி ஒலித்த
உரையில் நியாயம் இருப்பதாகவே
உணர்ந்தார் காக்கா!"

உள்ளம் கொந்தளித்து வேதனையில் மூழ்கினாலும் நியாய பூர்வமாகவே அவரின் சிந்தனை இருக்கிறது. வயல் களவெட்டியில் சூடு போடும் குழுவினர் அவ்விடத்தின் தேவை கருதி குழுக் குறியீட்டுச் சொற்களை அமைத்துப் பாவித்து வந்துள்ளனர். வேலைக்காரன், பொலிக்கொடி, வாரிக்காலன், கூழன், குஞ்சுவாயன் அவுரி, பெருவகிறன், வெட்டுவாயன், கணக்கன் முதலியவற்றை எழுத்திலே கொண்டு வந்து மொழி அமைப்பின் தாற்பரியத்தை உய்த்துணர வைத்துள்ளதும் நோக்கத்தக்கதே.

மொத்தமாக நோக்கும் போது ஆதம் காக்காவின் துயரம் தனிமனிதக் கொந்தளிப்பன்று. அது ஒரு சமுதாயத்தின் குமுறல் எனத் தெரிகின்றது. இக்காவியத்தை ஏழை மக்களின் குரலாகவும், நகரமயமாக்கல் கிராமத்தின் ஆத்மாவுக்குப் போட்ட அடியின் எதிரொலியாகவும் கொள்ள இடமுண்டு.

பொதுவாக கொந்தளிப்பு குறுங்காவியம் தென்கிழக்கு மக்களின் முப்பது வருடங்களுக்கு முற்பட்ட வாழ்வியலை அழகுறக் கூறுகின்ற பன்முகப்படைப்பாகும். கவிஞரின் ஆளுமையும் சீரிய நோக்குகளும் தெளிவாகப் புலப்படும் இக்குறுங்காவியம் பாலமுனை பாறூக்கிற்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது.

**- கவிஞர். மு. சடாட்சரன் -**

பெரிய நீலாவணை
கல்முனை
[illegible]

## தென் கிழக்கு முஸ்லிம் பிரதேசத்தின் ஆவணம்

இலங்கைத் தமிழ்க் கலை இலக்கிய வளர்ச்சியில் கல்முனைப் பிரதேசத்துக்கு குறிப்பிடத்தக்கதொரு பங்குண்டு. வாய்மொழி இலக்கியத்திலிருந்து நவீன இலக்கியம் வரை இந்தப் பங்களிப்பு விதந்து குறிப்பிடத்தக்கது.

இலங்கை நவீன தமிழ்க்கவிதைப் பாரம்பரியத்தை மஹாகவி தொடக்கி வைக்க அதன் பங்குதாரராக கிழக்கிலங்கையின் நீலாவணன் மாறுகிறார். பின்னர் சசி, நு்.மான், சோலைக்கிளி என்று அந்தப் பாரம்பரியம் நீளுகிறது. அதேபோல அ.ஸ, மருதூர்க் கொத்தன், உமாவரதராஜன் என்று கிழக்கிலங்கையிலிருந்து ஈழத்துச் சிறுகதைக்கு வளம் சேர்த்த பலர் உளர். அதேபோல சிறப்பான விமர்சனப் பாரம்பரியத்துக்கு கிழக்கிலங்கையிலிருந்து சசி, நு்.மான் முதலானோரை உதாரணமாகக் குறிப்பிட முடியும். இந்த வளம் இப்பிரதேசம் பற்றிய பார்வையையும் நமக்கு ஊட்டியது. இவ்விலக்கியங்களின் ஊடாக இப்பிரதேச மக்களின் அரசியல், மொழி, பண்பாடு அத்தனையும் வெளிப்பட்டது.

இவ்வரிசையிலே, நீலாவணன் எழுதிய " வேளாண்மை " என்ற குறுங்காவியம் 1982இல் வெளிவந்தது. இப்பிரதேச மக்களின் பிரதான தொழிலாக அமைந்த நெற்பயிர்ச் செய்கை தொடர்பான விபரங்களை கலை நயத்துடன் அக்குறுங்காவியம் வெளிப்படுத்தியது. அதேபோன்று மருதமும் நெய்தலும் கூடிய தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம்களின் பண்பாட்டை வெளிப்படுத்துவதாக பாலமுனை பாறூக்கின் " கொந்தளிப்பு" எனும் குறுங்காவியம் அமைகிறது.

இந்தக் "குறுங்காவியம்" என்ற சொற்றொடர் விமர்சனத்துக்குரியது. மஹாகவி இதனை "நவீன காவியம்" என்பார் நு்.மான் "நெடுங்கவிதை" என குறிப்பிடுவார். உண்மையில் இவ்வகையறாக்கள் சமூக, பொருளாதார, வரலாறு, அரசியல் பதிவினைச் செய்யும் நெடுங்கவிதைகளாக அமையும் சுவைமிக்க படைப்பே. மானுட சமூக அவலங்களைச் சித்திரிக்கும் படைப்புக்களாகவும் இவை அமைவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலமுனை பாறூக் கல்முனைப் பிரதேசத்திலிருந்து சுமார் நாற்பது வருடங்களுக்கு மேலாக கவிதை எழுதிவரும் குறிப்பிடத்தக்க கவிஞர். பதம், சந்தனப் பொய்கை ஆகிய கவிதை நூல்களின் ஆசிரியர் இவர்.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 1970களில் முனைப்புப் பெற்ற இடதுசாரி சிந்தனைப் போக்கில் கவிதை எழுதத் தொடங்கிய பாலமுனை பாறூக் தான் சார்ந்த சமூகத்தின் துன்ப ஒலியைக் கவிதையாக்கியவர். தான் சார்ந்த சமூகத்தின் ஆன்மீக உணர்வுகளைக் கவிதை ஆக்கியவர். "கொந்தளிப்பு" மூலம் தான் சார்ந்த பிரதேச, சமூக, பண்பாட்டு உணர்வுகளை மொத்தமாக வெளிப்படுத்து கின்றார். 'கொந்தளிப்பு' சுனாமி பேரவலத்தின் பின்னணியில் எழுந்தது.

ஆழிக்கடலெனும் அழகுப் பெண்ணாள்
நீலச்சேலை
அணிந்தே இருந்தாள்...!
வெள்ளைக் கரையோடு
வண்ணச் சேலை
கொள்ளை அழகு, கொள்ளை அழகு!
.....................
.....................

இந்தப் பூனையும் குடிக்குமோ பால் என
எண்ணும் படியாய்
இருந்தது கடலும்!

கொந்தளிப்பென்று
கொடூரம் புரிந்த
அந்தக் கடல்தான் இந்தக் கடலா?

சுகமான கடற்கரைக் காட்சியும் குடும்ப வாழ்வின் இனிய உணர்வுகளும் குடும்பக் கலாசாரப் பரிமாணங்களும் சுனாமியின் பேரவலத்துள் மறைவதும் சுனாமியைத் தொட்டெழுந்த முதலாளித்துவத்தினதும், அரசியலினதும் நவீன கபளீகரங்களும் 'கொந்தளிப்பில்' தெளிவாகிறது.

"கொந்தளிப்பு" முஸ்லிம் அரசியல் இருப்பு தொடர்பான கேள்விகளையும் எழுப்புகிறது. இந்த விபரம் இக்கவிதையில் 'துறைமுகப் பணிகள்' பற்றிய விவாதத்தில் விலாவாரியாக பேசப்படுகிறது.

அடக்கப்படலாம், நமது
அடையாளங்கள்
அகற்றப்படலாம்
நமது இருப்பே கேள்வியாகி
ஒடுக்கப்படலாம்.

நமது கலை கலாசாரங்கள்
மார்க்க அனுமதி
இல்லா தொழியலாம் .............
............................

மீனவ தொழில் முறை வரலாறு, அம்பாப் பாடல்கள், கடற்கரையில் றைற்றா என்ற கிராமிய சிறுவர் விளையாட்டு முதலான சுவையான தகவல்களும் இக்கவிதையினூடே வெளிப்படுகின்றது.

மேலும், இப்பிரதேசத்தின் வயல் நிலங்களின் வரலாறு, வேளாண்மை முகாமைத்துவம், வேளாண்மைத் தொழில் முற்றிலும் இயந்திரமயமாகியுள்ள சூழ்நிலை, முதலானவையும் கொந்தளிப்பில் பதிவாகியுள்ளது.

குறிப்பாக தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம்களின் வாழ்வினைப் புலப்படுத்தும் குறிப்பிடத்தக்கதொரு படைப்பாக பாலமுனை பாறூக்கின்கொந்தளிப்பு அமைந்துள்ளது. துணிச்சலுடன் கவிஞர் எடுத்துரைக்கும் அரசியல், சமூக, சுரண்டலுக்கு எதிரான கருத்துக்கள் வரவேற்கத்தக்கன. கலைநயத்துடன் கவிதை சொல்லும் பாங்கும் விதந்துரைக்கத்தக்கது. இலக்கியத்தின் ஒட்டுமொத்தப் பணியினை தன் படைப்பு மூலம் பாறூக் வெளிப்படுத்தியுள்ளார். பாலமுனை பாறூக்குக்கு நமது பாராட்டுக்கள்!

**- றமீஸ் அப்துல்லா -**

மொழித்துறை,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
ஒலுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொண்டுவந்த கொந்தளிப்போடு

கொந்தளிப்பை உங்களிடம் கையளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இது உங்களிடம் "கொண்டுவரப்பட்டிருக்கின்ற" கொந்தளிப்பு. "கொண்டுபோன" கொந்தளிப்பு அல்ல.

எமது உடமைகளைக் "கொண்டுபோன" எம்மில் சிலரைக் "கொன்றுவிட்டுப் போன" ஆழிக் கொந்தளிப்பின் பின்னணியில் எழுந்த எண்ணப் பேரலைகளின் கொந்தளிப்பு இது.

1987 இல் எனது பதம் கவிதைத் தொகுதி வெளிவந்தது. மிக நீண்டகாலத்தை எடுத்துக் கொண்ட பின்னரே எனது இரண்டாவது தொகுதி சந்தனப் பொய்கை 2009 இல் நூலுருப் பெற்றது. இப்பொழுது, கொந்தளிப்பை மிக குறுகிய கால இடைவெளியில் 2010இல் உங்கள் முன் கொண்டுவர முடிந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

குறுங்காவியம் ஒன்றை எழுத வேண்டும் என்ற முன்கூட்டிய தீர்மானம் எதுவும் என்னிடம் இருக்கவில்லை. எழுதுவதற்கென்று ஒரு தனியறையை ஒதுக்கிவைத்துக் கொண்டு ஆறஅமர தனியாக உட்கார்ந்து எழுதுகின்ற பழக்கமும் கூட ஏனோ இதுவரை எனக்குக் கூடிவரவில்லை. ஆயினும் 26.12.2004 இல் தனது "மறுபக்க" கோரமுகத்தைக் காட்டி "சுனாமி" என தன்னை அறிமுகப்படுத்தி அடையாளப்படுத்திக் கொண்ட ஆழிப் பேரலையின் அனர்த்தத்தை, அது ஏற்படுத்திய அவலத்தை, துயரத்தை, இழப்பை பதிவு செய்ய வேண்டும் என மனம் எண்ணியிருந்தது. அந்த எண்ணம் "கொந்தளிப்பாக" ஒரு சிலநாட்களில் எழுத்துருவம் பெற்றுக் கொண்டதிலும், அது அதன் வடிவத்தைப் பெற்றுக் கொண்டதிலும் எனக்கு மனநிறைவு இருக்கின்றது.

தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசத்தாரின் கலாசார, பாரம்பரிய வாழ்வியல் கூறுகளைப் படம் பிடிப்பதாகவும் காட்சிப் படுத்துவதாகவும் அவர்களின் அரசியல், பொருளாதாரம், தொழில், இருப்பு என்பன தொடர்பாகப் பேசுவதாகவும் இக்குறுங்காவியம் அமைந்து வந்திருப்பதானது எனக்கு திருப்தியைத் தருகின்றது.

இப்பிரதேசத்தில் வாழும் மூத்த கவிஞர் ஒருவரிடமும் திறனாய்வாளர் ஒருவரிடமும் அணிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள எண்ணினேன். கல்முனைப் பிரதேசத்தின் மூத்த கவிஞர் மு. சடாட்சரன் அவர்களும் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் - திறனாய்வாளர் றமீஸ் அப்துல்லா அவர்களும் அணிந்துரைகளை வழங்கினர். இப்பிரதேசத்தின் இலக்கியப் பார்வையின் இருவேறு தளங்களைத் தரிசிப்பதற்கு இவ்வணிந்துரைகள் உதவும் என நம்புகின்றேன். அவர்கள் இருவருக்கும் எனது அகம் பூத்த நன்றிகள்.

என். செல்வநாதன் அவர்களும் கவிஞர் முல்லை வீரக்குட்டி அவர்களும் இரசனைக் குறிப்புகளை வழங்கி மதிப்பளித்தனர். நூலுருவாக்கத்தில் பலர் பல்வேறு வழிகளில் எனக்குத் துணை புரிந்தனர். கணணிப் பதிவு செய்த எனது இளைய மகன் எம்.எப். பர்ஹாத், வடிவமைப்பில் உதவிய என்.ரி. அக்ரம், ஏ.எச்.எம். அஜ்மல், அட்டை அமைப்பு பக்கவடிவமைப்புக்களைச் செய்து அச்சுப்பணிகளுக்கும் உதவிய நண்பர் நவாஸ் செளபி, பொருத்தமான ஓவியங்களை வரைந்து தந்த ஜலீல் ஆசிரியர், மறந்து போயிருந்த வயல்நிலச் சொற்களை தூசுதட்ட உதவிய பாலமுனை எம்.ரி. மிஸ்கின் பாவா, "அம்பாப்" பாடல் பெற உதவிய பாலமுனை எம்.எஸ்.எம். ஹனீபா, ஆகியோருக்கு இத்தருணத்தில் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளை அள்ளிச் சொரிவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இனி..... கையளித்த கொந்தளிப்போடு நீங்கள் களிப்புறலாம்.


அன்புடன்,

**- பாலமுனை பாறூக் -**

03.10.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01



ஆழிக்கட லெனும் அழகுப் பெண்ணாள்
நீலச்சேலை
அணிந்தே இருந்தாள்..!
வெள்ளைக் கரையொடு
வண்ணச் சேலை
கொள்ளை அழகு, கொள்ளை அழகு !



நிலவு மங்கை இருட்திரை கிழித்து
எழில்தான் எதுவென
எட்டிப் பார்த்தாள்!
மஞ்சள் பூசிய
மங்கை அவளும்
விஞ்சிய அழகொடு விண்ணில் மிதந்தாள்

அமர்ந்து மேலெழும்
ஆழியள் மார்பில்
மிதந்து ஊர்ந்திடும்
தோணிப் பூச்சிகள் !
குனிந்து, பார்த்து, மகிழ்ந்தாள் நிலவாள்,
ஒளிர்ந்தது குளிராய்
ஓ..அவள் சிரிப்போ ?

அழகை இரசிக்கவா
அமைதியைப் பெறவா
பழகவா பேசவா
பாடி மகிழவா
ஆடவர் பெண்டிர்
அருகரு கிருந்து
கூடிக் களிக்கவா
கொஞ்சவா குலவவா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணவா ? பருகவா ?
ஒளியினில் நனையவா ?
பிள்ளைக ளோடும்
பேச்சைப் பகிரவா ?

பட்டம் விடவா ?
பறக்கும் பிள்ளையின்
வெள்ளை மனதுடன்
விரும்பி இணையவா ?

எத்தனை பேர்கள்
எத்தனை பேர்கள் !

ஒருவராய்... இருவராய்
உறவினர் சிலராய்
தெரிந்தவர் பலரும்
தெரியா தவர்களும்
வருகிறார் செல்கிறார்
வழமையைப் போலவே !

ஓரமாய்த் தனியாய்
ஒதுங்கியே நின்ற
ஒற்றைத் தென்னையின்




கீழே வந்து...
அமர்ந்து கொள்கிறார்
ஆதம் காக்கா[1] !

ாக்கா[1] - மூத்த சகோதரன். வயதில் மூத்தவர்களை மரியாதையாக காக்கா என்றே
ப்பகுதி முஸ்லிம்கள் அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02



பொந்தில் இருந்து
புறப்பட் டாங்கொரு
நண்டு, நடந்து
நடந்து திரிந்தது !



கடற்கரை மணலில்
களிப்போடு பிள்ளைகள்
வீடுகள் கட்டினர் விளையாட் டாகவே
மணல்வீ டொன்றைக் கட்டிய பிள்ளை
மகிழ்ந்தது பூவாய்
மலர்ந்து சிரித்தது !

இடையில் வந்த
இன்னொரு பிள்ளை
எட்டி உதைத்து மிதித்துச் சரித்தது

அழுதது பிள்ளை
அழிந்தது வீடென
விழுந்து புரண்டு
விம்மி அழுதது !

மழையொன் றடித்தது
மனசில்; நனைந்தார் காக்கா !
பின்னர் -
விழிகளை விலக்கி
சுழியினில் வைத்தார்

ஆழியைப் பார்த்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதம் காக்கா
ஏனோ சட்டென
எழுந்து நடந்தார்

பீடியைப் புகைத்தார்
பின்னால் கைகளைப் பின்னிய படியே
நடந்து, அலைகளை
அடைந்து.., திரும்பி
மீளவும் வந்து
அமர்ந்தார் அவரே !

ஆழிப் பேரலை அனர்த்தம்
நினைவாய்
வேதனை தரவே
விழிகள் பனித்தன !

அழகுக் குள்தான்
ஆபத் ததிகமோ ?
பிழைகள் நடந்ததோ பேரலை பொங்க ?

கொந்தளிப் பென்று கொடூரம் புரிந்த
அந்தக் கடல்தான்
இந்தக் கடலா ?
எண்ணிப் பார்த்தார் இதயம் வலித்தது



இந்தப் பூனையும் குடிக்குமா பால்என
எண்ணும் படியாய்
இருந்தது கடலும் !

கொந்தளிப் பென்று
கொடூரம் புரிந்த
அந்தக் கடல்தான் இந்தக் கடலா ?

ஒருசிறு பொழுது...!
ஊரே உருண்டது
கடலலை பாய்ந்து காவு கொண்டது,
உறவுகள் பிரிய
உடமைகள் உடைய
உரித்துகள் அகல
கடலலை பாய்ந்து காவு கொண்டது,

அடுக்கடுக்காக மையத்துக்கள்[2]
அந்த ஊரெலாம்
நிறைந்து கிடந்தது !
எடுக்கக் கழுவ கபுறினுள்[3] வைக்க
எவரும் இலாத
நிலையும் இருந்தது !

அழிந்தன உயிர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்தன பொருட்கள்
அலைந்தனர் மக்கள்
அகதியாய்த் தெருவில்

மரண வீடுகள்
இருந்ததா ?
இல்லையே...!
மரணம் இருந்தது
இருப்பிடம் இல்லையே !

கடலலை பாய்ந்து காவு கொண்டது !

மனைவியைத் தேடி
பிள்ளையைத் தேடி
தினந்தினம் அலைந்தார்
ஆதம் காக்கா !
மனைவியை ஒருநாள்
சடலமாய்க் கண்டார்..!
மறுநாள்.., பிள்ளைகள்
ஒருவரை ஒருவர்
தழுவிய வாறு
மரணித் திருந்ததை
உறுதிப் படுத்தினார் !



பேரலை புரிந்த கொடுமையை நினைத்து
பெருமூச் செறிந்தார்
ஆதம் காக்கா !


பிள்ளைகள் இருவரும்
மனைவியும் சேர்ந்து
முன்னால் வந்து, நின்றனர் நிழலாய் !
உள்ளம் கனத்து
உடலும் நடுங்க
ஒருகணம் அவரே
தன்னையும் மறந்து
பொருமினார், அழுதார், பூமியில் புரண்டார் !

மையத்து – உயிரற்ற சடலம்
கபுறு – புதைகுழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03



மனைவி யவள் நினைவுடனே
மக்களுமே சேரக்
கனத்த தவர் நெஞ்சமெலாம்
கலங்கித் தான் போனார்
எனையும் ஏன் எடுக்கவில்லை
இவர்களுடன் சேர்த்தே !
எனஅழுது மனம் வெதும்பி
கடலினையே கேட்டார் !



இல்வாழ்வில் அவரோடு
இணைந் திருந்த பெண்ணாள்
இல்லாமல் போனாளே
எண்ணுகின்ற போதே
இல்லையினி வாழ்வென்று
ஏங்கித்தான் போனார்
எல்லாமே அவள் தானே
இயங்க வைத்த பாதி !

"இஞ்ச மஃகூறா"
என்றவளும் அவரை
முந்திப் பிறந்தவளின்
பெயர் சொல்லி அழைப்பாள்
'சீ 'யென்று ஒரு நாளும்
சொல்லியவ ளில்லை
தேவையெதோ அவருக்காய்
தெரிந்தோடிச் செய்வாள் !

மனைவி யவள் நினைவுவர
மனங் கசிந்து போனார்
அழகியவள், குறிஞ்சி மலர் !
அரிதான பெண் தான் !

குடமெடுத்து நீர் மொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்த போதே
அழகியவள் தனக் கென்றே
அவர் உறுதி செய்தார்

பலர் அவளில் கண்வைத்துப்
பார்த் திருந்த போதும்
முறைமாப் பிள்ளைகள்
முன் நின்ற போதும்
உழைப்பாளி காக்காவே
என்றறிந்து கொண்டே
தடையின்றிப் பெண்தரவே
தாரமென ஏற்றார் !

முப்பத்து மூன்றாண்டு
முழுவதுமாய்ச் சேர்ந்து
அர்ப்பணித்து அவரோடு
அவள் வாழ்ந்த வாழ்வு
இப்பொழுதும் நெஞ்ச மெலாம்
இனிக்கிறது, ஆயின்
விட்டு விட்டுச் சென்றாளே
முந்தியென நொந்து
விம்மியது அவர் மனசு
விழி நீரைச் சொரிந்தே !



உறங்குதற்கு முன்னாலே
ஒருபொழுதைத் தெரிந்து
பிரச்சனைகள் குடும்ப சுமை
பேசவென வருவாள்
வட்டாவைக் கொண்டு வந்து
விறாந்தையிலே வைத்து
வெற்றிலையும் மடித்து அவள்
வினயமுடன் தருவாள் !

சுனாமி வந்து அழிப்பதற்கு
ஒரு வாரம் முன்னால்,
மனைவி யவள் அருகிருந்து
மனு ஒன்றை வைத்தாள் !.

"வயசேறிப் பெய்த்து ஒங்குட
மஃசூறாப் புள்ள
பெரிய புள்ள யாகி இப்ப
வரிசங்கள் அஞ்சி"

மணம் முடித்துச் சில வருடம்
மழலை இன்றி இருந்து
மலடர் என ஊரார்கள்
பழித்துரைக்கக் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ச்சை[4] வைத்துப் பள்ளிக்கு
நிய்யத்தும்[6] ஆக்கி
பெற்றெடுத்த பிள்ளையவள்
மஃசூறாக் கண்ணே !

சீனிமா[7] வறுத்தெடுத்துப்
பணியாரம்[8] சுட்டு
ஆட்களினை அல்லயலில்
அழைத் தெடுத்துக் கொண்டு
மாப்பிள்ளை கேட்டுப் போய்
மோதிரமும் போட்டு
நிச்சயமும் செய்து வைத்த
நினைவுகளை மீட்டார்

இளையவளோர் இளையநிலா
உம்மாவின் சாயல்
குறுநகையோ(டு) எப்பொழுதும்
குறிப்பறிந்து ஓடி

பணிவிடைகள் செய்து தரும்
பாசமிகு பிள்ளை
சுறுசுறுப்பாய் இயங்கு மவள்
வாப்பாவின் செல்லம்



முப்பது ஜுஸ்உ[9] வினையும்
முழுவதுமாய் ஓதி
தலைப்பாத்திஹா[10] வுமவள்
சிறுவயதில் முடித்தாள்
படிப்பினிலும் சிறப்பான
முடிவுகளே பெற்றாள்
நினைவலையில் அவள் மிதக்க
நிலைகுலைந்தார் காக்கா

சுழிவந்து அழிப்பதற்கு
இருமாதம் முன்னால்
பிரிவறிஞ்சாள்[11] பிள்ளையென
அறிவித்தல் வரவே
பள்ளிக்கு[12] ஓடிப்போய்க்
கூட்டி வந்து அவளை
உள்ளறையில் இருப்பாட்டிச்
சீர் செய்தாள் உம்மா

அல்லயலில் உள்ளவர்கள்
ஆலாத்தி[13] எடுத்து
குலவையிட்டு[16] வெடிச்சுட்டு[15]
கொண்டாடி மகிழ்ந்து
கோழிமுட்டை பிள்ளைக்குக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து கொடுத்து
பிட்டவித்து நல்லெண்ணெய்
புரட்டி அதை எடுத்து
ஒத்தடமும் கொடுத்ததனை
உளம் நினைக்க அழுதார்

அழுதழுது விழிகளவை
குளமாகிப் போக
விழுந்து அவர் மணலினிலே
விறைத்தபடி கிடந்தார்
இழந்திட்டார் உணர்வுகளை
இயலவில்லை: காக்கா
கடல் மணலில் கால்நீட்டிக்
கண்ணயர்ந்து போனார்.

நேர்ச்சை [4] ? நேர்த்திக்கடன்
பள்ளி[5] ? பள்ளிவாசல் - முஸ்லீம்கள் தொழும் இடம்
நிய்யத்து [6] ? நேர்த்திக்கடன் வைத்து பாற்சோறு ஆக்குதல்
சீனிமா [7] - இனிப்பு தீன் பண்டம்
பணியாரம [8] ? பலகாரம்
முப்பது ஜுஸுவு[9] - திருக்குர்ஆனிலுள்ள முப்பது அத்தியாயங்கள்
தலைப்பாத்திஹா [10] - பாத்திமா நாயகியைப் புகழ்ந்துபாடப்பட்ட அரபுத் தமிழ் காவியம்.
பிரிவறிதல் [11] - பருவமடைதல்
பள்ளி[12] - பாடசாலை
ஆலாத்தி [13] - ஆரத்தி
குலவை [14] - பெண்கள் நாக்கை மடித்து மங்கள ஒலி எழுப்புதல்
வெடிச்சுடுதல் [15] - பட்டாசு கொளுத்துதல்.





04

அலையொன்றடித்து
அவரை நனைத்தது
விழித்தார் காக்கா !

பீடியொன்றின் தேவை இருந்தது
வார்ப்பை[16] நோக்கி
கையும் நீண்டது,
பீடியை தேடி விரல்கள் துழாவின !

இழுத்தார் காக்கா பீடியைப் புகைத்தே
இழந்த உணர்வே
மீண்டதாய் உணர்ந்தார் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இன்னும் சுனாமியின் அழிவு
நெஞ்சிற் பதிந்து
நினைவைத் துளைத்தது !

இல்லிடம் இல்லா திருப்பவர் இன்னும்
அல்லற் படுகிற
அவலம் தீர்ந்ததா ?

மந்திரி எம்பி
என்று பலரும்
வந்து பார்த்து
வாக்குரை தந்தார் !

காற்றில் போன வாக்குகள் அவையே
காரிய மானதா?
கவலை தீர்ந்ததா ?

உள்ளூர் வெளியூர் நிறுவன மெல்லாம்
உதவி புரிந்தன
உண்மைதான்; ஆயின்
இல்லா தவர்களும்
இழந்தவர் களுமா
எல்லா வற்றையும் பெற்றெடுத் தார்கள் !



நெத்தலிக் கென்று போட்ட இரையை
சுறாக்கள் வந்து
சுருட்டிக் கொண்டதாய்
கட்டிட மிருந்தோர்
தொழில் இழக் காதோர்
கடலே எதுவெனக் காணா தவர்கள்
பெற்றெடுத் தார்கள்
பெருந்தொகை யாகவே !

கூரைத் தகடுகள்
குவிந்தன அங்கே..,
மாடி வீட்டில்
வசித்தவ ரிடத்தே !
ஏதொரு இழப்பும்
இல்லா திருந்தவர்
கூடுத லாகவே
குவித்தனர் அள்ளி !

கடலின் பக்கம் வந்தறி யாதோர்
படகை இழந்ததாய்ப்
பத்திரம் வைத்தார்
புதிது புதிதாய்ச் சங்கம் அமைத்து
பழைய எண்ணில்
பணிகள் முடித்தார் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரண மாகவே முடிந்த வீடுகள்
காரண மின்றிக்
கைவிடப் பட்டன
ஏனோ கட்டிய
வீடுகள், இன்னும்
இழந்தவர் கரங்களை
எட்டா திருந்தன !

ஆரிடம் கேட்பார் ஆரிதைத் தருவார்
அறியா திருந்தனர்
அவ்வூர் மக்கள் !

எட்டாக் கனியவை
என்று நினைக்க
துக்கம் தொண்டையை
கட்டிக் கொண்டது !

இழந்தவர்க்(கு) இல்லம்
இல்லை யென்றாகி,
இனப்படி தான் என
எவரோ சொல்லி.
கணக்கும் போட்டுக்
காட்டிய வீட்டுத்



தொகையினை நினைத்தும்
துவண்டார் காக்கா !


மறக்க முயன்றார் சுனாமியை அவரே !
மெல்ல எழுந்து,
இருப்பிடம் செல்லவே
எண்ணி நடந்தார் !

வார்ப்பை[16] - உடைகளை இறுக்கிக் கொள்ள அணியும் வாரில் உள்ள பை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05



இருட்டிக் கொண்டது
கடலின் நீரை
சுருட்டிக் கொண்டுபோய்
மேக இமைகளில்
சொருகிக் கொண்டது
வானம் -



இரண்டொரு முறையது
இருமிக் கொண்டது
இடியாய்.!
அழுதும் விடலாம்
மழையாய்.!
அதற்குள் காக்கா
செல்ல முயன்றார்

'காத்து வாங்கவா
காக்கா' என்று
கேட்ட குரலை
கேட்டுத் திரும்பினார்

பதிலெதும் சொல்ல விரும்பா நிலையில்
பார்த்துச் சிரித்து
பசப்பி மழுப்பினார் !

காற்று வாங்கிய
கடல்தான், ஆயின்
காற்று வாங்கிய
கடற்பரப் பிதுவா ?

கடலின் பரப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்து போனது.
கற்கள் கொண்டு
கொட்டியே கடலை
வற்றச் செய்யும்
வழிவகை செய்வதால்
இயற்கை வனப்பே
சுருங்கிக் கொண்டதாய்...
உணர்ந்தார் காக்கா
உரைத்திட வில்லை !

துறைமுக வேலை தொடங்கிய தாலே
தொழிலில் இருந்து
விடுபட நேர்ந்ததும்...
வெளியேற் றங்கள்
விரைவாய் நடந்ததும்...
மீன்பிடி யாளர்
அகற்றப் பட்டதும்...

காக்கா மனதில்
காட்சியாய் விரிந்தது !

தொழிலை இழந்த துயரம் மிகுந்தது,
சுமையே வாழ்வில்
சோர்வைத் தந்தது,



பரம்பரையான மீன்பிடித் தொழிலே
சிறுசிறு தொகைக்கு
ஏலம் போனது்

பின்னால் உள்ள
பேரிழப் பெதுவென
அன்று எதையும் அறியா மீனவர்
முன்னால் பாய்ந்து நிவாரணம் பெற்றார்
தண்டயல்[17] முகாமை[18] என்று சிலரோ
முந்திக் கொண்டு
பெயர்கள் பதிந்தார் !

தந்திரம் புரிந்தே தனக்குக் கிடைத்த
பங்கொடு சேர்த்து
மேலும், மேலும்,..
கூலிகள் பங்கிலும்
கைகள் நனைத்தார் !

சிலநாள் அவர்கள்
சேட்டும் சாரனும்
புதிதாய் அணிந்து
மோட்டார் சைக்கிளில்
ஓடித் திரிந்தார் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கா முகத்தில் கவலை தெரிந்தது !
எனினும் அவரோ
இலேசாய் சிரித்தார்
எதனை நினைத்தோ ?

புல்லரை எண்ணிய
புன்சிரிப் பதுவோ ?

பகலில் மீன்களைப் பிடிக்க வென்றே
கரைவலைத் தோணி
கடலில் இறங்கும் !

கரைவலைத் தோணி மீன்பிடி யாளர்
தொழிலே இன்றித்
துரத்தப் பட்டனர் !
கடலில் செல்லும்
கரை வலைத் தோணி
கரையி லிருந்தும் அகற்றப் பட்டது !

கரைவலைத் தோணியின்
காட்சி இன்னும்
காக்கா மனதில் களிப்பைத் தந்தது !
ஊரே திரண்டு நிற்பதைப் போல
காலை வேளையில்



கடற்கரை இருக்கும்
கந்தூரி[19] கொடுக்கும் பள்ளிகள்[20] போல
காட்சி தருமே
கடற்கரை அன்று !

ஆதம் காக்கா அதனை நினைத்து
மேலே பறந்தார்
இறக்கை கட்டி !

தண்டயல்[17] – தோணியைச் செலுத்துவதில் பிரதான பங்கு வகிப்பவர்
முகாமை[18] – தோணி வலைச் சங்கத்தை நிரவகிப்பவர்
கந்தூரி[19] – இறைவனிடம் பிரார்த்தித்து ஊரைக் கூட்டி சோறு கொடுத்தல்.
பள்ளி[20] – பள்ளிவாசல் முஸ்லிம்களின் வணக்கஸ்தலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



கரைவலை யோடு
கடலினில் இறங்கி
அலைகளி னோடு
அடிபட் டெழுந்து
படகுகள் ஓடப்
பாடிப் பாடி
கரையினில் நிற்போர்
வலையினை இழுப்பர்

'அம்பா' பாடியே
அவர்கள் தோணியை
இழுக்கும் காட்சி
நினைவில் பூத்தது !



பாடிப் பார்த்தார் பாடலைக் காக்கா
பாடப் பாட
பரவசம் நெஞ்சில் !

**'ஏலேலோ ஏலேலோ**
**ஆடடா வல ஐயட வல**
**கொள்ளுங்க மாதுள**
**மாதுள சீருள**
**சீருள வேருள**
**வேருள வெங்காயம்**
**வெள்ள வெங்காயம்**
**வெள்ளி உறுவா**
**உறுவா கறுவா**
**கறுவா சீரகம்**
**சீரகம் இஞ்சி**
**இஞ்சி மிளகாய்**
**மிளகாய் ஏலம்**
**ஏலேலோ ஏலேலோ**
**ஆடடா வல ஐயட வல'**

களைப்பை மறக்க
கவலை மறக்க
தொழிலில் புதிய தெம்பு பிறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்து இழுத்துப்
பாடும் பாடலில்
வேளைக் கேற்ப
வார்த்தைகள் மாறும் !

அருகில் நின்று
வலையினை இழுப்போர்
உறவு முறையில் மச்சினன் என்றால்
பாடல் மாறும்
படித்தார் காக்கா !

ஏலேலோ.... ஏலேலோ...
ஒன்ட ராத்தாவ.... பாயில...
ஏலேலோ... ஏலேலோ...
தனகிக் கொள்வார் காக்கா !
அதனை -
நினைத்து நினைத்து
சிரித்தார் அவரே !

தண்டயல் தோணியில்
நின்று கொண்டே
சால்வையை எடுத்து அசைத்து அசைத்து
சைகை புரிவார் !



தரையில் நிற்கும்
முகாமை, கைகளை
அங்கும் இங்குமாய்
ஆட்டிய வாறே
ஆணை இடுவார் !

"இழுடா இழுடா
இந்தப் பக்கம் மடியைப்[21] பார்ரா
வெடிச்சாப் போச்சு
விர்ரெனப் போகும்
வெளியே மீன்கள்"
என்றே கத்தி இழுப்பார் அவரும் !

மீன்கள் வலையில்
கூடிக் கிடந்தால்
ஊரே மகிழும், உறவினர் தெரிந்தோர்
வந்து பார்த்து
வலைமீன் கழற்றி
அன்பளிப் பாகவும் அதனைப் பெறுவர்

பங்குகள் கிடைக்கும், வலை இழுத்தோரும்
தண்டயல் முகாமை
முதலாளி மாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கணக்கப் பிள்ளையும்
காசைப் பிரிப்பர் !

முழுப்பங் கென்றும் அரைப்பங் கென்றும்
முதலாளிக் கென
விசேட பங்கும்
தண்டயல் முகாமை கணக்கர் பங்கும்
கழித்தே எடுத்து
இருப்பும் வைத்தபின்
இருக்கும் பங்கையே
இழுத்தவர் பெறுவார் !

பங்குப் பிரிப்பில்
சங்கடம் அங்கும் !
எங்குதான் இல்லை
எனினும் காக்கா
நொந்தவ ரானார்
நினைவும் வரவே..!

மடி[21] – வலையில் மீன்கள் பிடிபட்டுக் கிடக்கும் இறுதிப்பகுதி.





07

பொந்தில் இருந்து புறப்பட் டாங்கொரு
நண்டு நடந்து நடந்து திரிந்து
அங்கு கடலை அடைந்து இறங்கி
மீளவும்
வந்தது மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையில் நண்டு மீண்டும் நடக்க
காத்தே இருந்த சிறுவன் அதனை
அடித்துப் பிடித்து அடக்கினான் கைக்குள் !

விழிகள் நனைய
விலகி எழுந்து
கடலைப் புதிதாய்ப்
பார்ப்பது போலவே
பார்த்தார் காக்கா

இரைகளைக் கொளுவி தூண்டிலில் இட்டு
முறையோடு
சிறுசிறு தோணிகள் கடலினில் ஓடும்
இரைதேடி
இராக்கடல் தோணி மீன்களை தேடும்
வலையோடு
கடலினில் கிடந்து: காலையில் கிடைத்தால்
கரைசேரும்

அரிக்கன் லாம்பின் சிறு சிறு வெளிச்சம்
ஆழ்கடல் மீன்பிடி
இருக்கும் கடலும் வானமாய் மாறும்
இதுவொரு புதுஎழில்
சிமிட்டும் தாரகை கடலினில் தோன்றும்



சிறு விளக்கே
ஒளிரும் தாரகை விழியினை மூடும்
வழி நடுவே !

கடலினில் இந்த காட்சிகள் எங்கே
காணலையே !
படகுகள் எங்கே பார்க்கிறார் காக்கா
தோணலையே !
பெரியமீன் பிடிக்கும் ஆழ்கடல் மீன்பிடி
மறைந்ததுவே !
அழுகிறார் காக்கா எழுகிறார் மெல்ல
நடந்திடவே !

கடலை வனப்பை
தொழிலை இழப்பை
நினைக்க நினைக்க
கடலின் உப்பாய்க்
கசிந்தது கண்ணீர்

துறைமுக வேலை
தொடங்கிய தாலே
பலரும் அங்கே
பாதிப் படைந்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க நெஞ்சில்
நெருப்பே எரிந்தது

துறைமுக வேலை
தொடங்கிய வுடனே
பெறலாம் சிறிய
வேலைகள் என்றே
நம்பி இருந்தோர்
வேதனைப் பட்டனர் !

வெளியூர் இருந்து
வந்த பேர்களே
வேலைக் கென்றும் அமர்த்தப் பட்டனர் !

அமைதியைப் பெறவே
அமர்ந்த காக்கா
சுமையினை இறக்க
முடியா திருந்தார்





08

எல்லை வரைந்தது
பிள்ளை,
கடற்கரை மணலில்
முள்ளிக் கோடு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லைத் தலையில்
வைத்துக் கொண்டே,
கண்களை மூடி
எட்டி எட்டி
வைத்தது காலை !

“றைற்றா, றைற்றா
றைற்றா...!”
“இல்லை இல்லை
இல்லை
முள்ளி முள்ளி”
வெளியே வந்தது சின்னப் பிள்ளை

“றைற்றா றைற்றா
றைற்றா”
‘றைற் றைற் றைற்’
எல்லாப் பழத்தையும்
வென்றது மூத்தது !

“ஒரு பழம் ரெண்டு பழம்
மூண்டு பழம்”......
அடித்தது மூத்தது
அழுதது சிறிசு !



துண்டு பீடியின்
தொங்கலில் கடித்து
துப்பினார் காக்கா
‘தம்’ மொன் றிழுத்தார் !

எண்ணப் பறவையின்
இறக்கை ஒடிக்க
இன்னும் அவரால்
இயலவே இல்லை !

“இடமினிப் போகும்
இருக்கும் இடங்களில்
குடியேற் றங்கள்
நிகழவும் கூடும்
பெரும் பான்மைக்கே
முதலிடம் கிடைக்கும்
வழியெது மில்லை
வந்தமர்ந் திடுவர்”

என்று எவரோ அரசியல் மேடையில்
பேசிய பேச்சு
ஞாபகம் வந்தது !

“வந்தால் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரட்டும் அவர்களும்
ஒன்றாய் இணைந்து
ஒருதாய் பெற்ற
மக்களைப் போல
வாழ்ந்தால் தப்பா
வாழ்வோம் இணைந்தே
நம்பினார் காக்கா
நல்லது என்றே !

பக்கத்து பக்கத்து வீடுகளில் இருந்து
பாசைகள் இரண்டையும்
பேசி மகிழ்ந்து
நட்புற வோடவர் விட்டுக் கொடுத்து
நல்லது கெட்டதில்
கூடிக் கதைத்து
அற்புத மாகவே உறவை வளர்த்து
அமைதிக் குடும்ப மாய்
வாழ்ந்தனர் அங்கே !

அகத்தில் மலர்ந்ததோர்
அழகுக் காட்சி

பேச்சின் தொடர்ச்சி
இரப்பராய் நீண்டு



காக்கா காதில்
மீண்டும் ஒலித்தது

காட்சி கலைந்தது !

'அடக்கப் படலாம்' நமது
அடையாளங்கள்
அகற்றப் படலாம்
நமது இருப்பே கேள்வி யாகி
ஒடுக்கப் படலாம்

நமது கலை கலாசாரங்கள்
மார்க்க அனுமதி
இல்லா தொழியலாம்

நடந்த நிகழ்வுகள்
நடந்து கொண்டிருப்பவை
இவற்றை வைத்தே
இதனைச் சொல்கிறோம்..

என்று தொடர்ந்த
அந்த உரையிலும்
ஏதோ இருப்பதாய்
உணர்ந்தார் காக்கா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப் பட்டவை
கண்ணால் கண்டவை
அயற் கிராமத்தார்
வயல்களி லிருந்தும்
ஓட ஓட
விரட்டப் பட்டமை

காக்கா மனதில்
படமாய் ஓட
குழம்பிப் போனார் காக்கா
அங்கே..
குந்தி இருந்தவர்
குறுகிப் போனார் !

"இலங்கைத் தாயின்
பிள்ளைகள் நாமே
இதனால் -
இணைந்து வாழ்வதை
எவர்தான் வெறுப்பர்
இனம் மதம் மொழியென
இருக்கும் நமது
தனித்துவத் தோடு
அனைவரும் இணைந்து



புரிந்துணர் வோடு
அதிகாரங்களை
சமமாய்ப் பகிர்ந்து
வாழ்வதைத் தானே
விரும்பிக் கேட்கிறோம்
தவறா தப்பா
நியாய மில்லையா?

உரத்த குரலில்
ஓங்கி ஒலித்த
உரையின் மிகுதியும்
செவியில் நுழைந்தது !

உரையில் நியாயம் இருப்பதாகவே
உணர்ந்தார் காக்கா !
எண்ணப் பறவையின்
இறக்கை உடைக்க
ஏதொரு வழியும்
இல்லா திருந்தவர்


பீடியை எடுத்து
விரல்களில் இடுக்கி
இழுத்தார் கன்னம்
குழிவிழு மாறே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை இமைக்குள்
ஒளித்தவ ராக
கால்களை நீட்டி
மரத்தில் சாய்ந்தார் !





09

'வெள்ளாம[22] நாளக்கி
வெட்டு றாக்கா
வினாவின் பக்கம்
தலையைத் திருப்பி
'இல்லை' யென்றே தலையால் சொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலை விட்டு இடரே பட்டு
தொழிலே இன்றி
துயரப் பட்டு
சிலநாள் அவரே சிரமப் பட்டு
வெளியா னானார்[23], போக மிரண்டாய்
வெள்ளத் தம்பிப் போடியின்[24] வெளி[25]க்கே !

கிழக்கே கடலும் மேற்கே வயலுமாய்
இரண்டே தொழில்கள்
இருந்த இவ்வூரில்
கடலும் போக
கமம் தான் மிச்சம் !

இருக்கும் நிலமோ
எவர்க்கோ சொந்தம்
பாய்ச்சல் வடிச்சல் உள்ள நிலத்தின்
போடி மார்களோ
வெளியூர்க் காரர் !

ஏழை எளியோர்க்கு
என்று இருப்பவை
காடு வெட்டிய
காணிகளே தான் !



காடு வெட்டி பேமிற் எடுத்தும்
கனநாள் ஆச்சு, ஆயினு மின்னும்
பாய்ச்சலு மில்லை வடிச்சலு மில்லை
பராமரிப் போர்க்கோ
உறுதியு மில்லை !

மழையை நம்பி
முதலைப் போட்டு
அழிந்தே போனார் ஏழை எளியோர் !

ஆண்டு பலப்பல
கடந்து போயின;
அஸீஸ்துரை[26] தந்த
அந்தக் காணிகள்
சூரியன் காணாத் தாமரை போல
பாசன மின்றிப் பயனற்றுப் போயின

அஸீஸ்துரை வழங்கிய அந்தக் காணியில்
முடிந்த வரையில்
முயன்றனர் ஊரார்
திருந்திய தாகப்
பயிரினைச் செய்ய
விரும்பிய போதும் முடியவே இல்லை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிகள் நமக்குக்
கிடைத்த நாள் முதல்
பாசன வசதியும்
பெற்றே இருந்தால்
நிலையிது மாறி
நிமிர்ந்தே இருக்கலாம்...
வெளியானி லிருந்தும்
விடுபட் டிருக்கலாம்

காக்கா நெற்றியீல்
கவலைக் கோடுகள்
தாக்க மாகவே தெரிந்தன
மிகுதம் !

வெள்ளாமை வெட்டும்
வேலை இருந்தது
வெள்ளத் தம்பிப் போடியின் வெளியில் !
செல்லும் வழியில்
'தடங்கல்' இருந்ததால்
இல்லை யென்றே செய்தி வந்தது !

அரிவி வெட்டும் மெசினே வந்து
அரித்துக் கொன்றது



வெளியான் மார்களை !

கடப்பொலி[27] இல்லை
தலப்பொலி[28] இல்லை
கதிர்கள் பொறுக்கும்
பெண்டுகள் இல்லை !

தாக்கத்தி[29] இல்லை
ஏக்கத்தி லானோம் !

ஏங்கினார் காக்கா
எழும்ப முயன்றார்
தாங்கா மனசு
தவியாய்த் தவித்தது !

வெள்ளாம[22] – வேளாண்மை
வெளியான்[23] - வேளாண்மை செய்பவர்
போடி[24] - நெற்காணி சொந்தக்காரர்
வேளி[25] - பரந்த நெற்காணி
அஸீஸ்துரை[26] - அறிஞர் ஏ.எம்.ஏ.அஸீஸ் இப்பகுதியின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தராக இருந்து அளப்பரிய சேவையாற்றியவர்.
கடப்பொலி[27] - (கடைப்பொலி) நன்கு தூற்றாத நெற்குவியல்
தலப்பொலி[28] - (தலைப்பொலி) நன்கு தூற்றிய நெற்குவியல்
தாக்கத்தி[29] - அரிவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10



பற்றுக் கோடாய் தந்தையின் கரத்தைப்
பற்றிக் கொண்டே
ஆங்கொரு பிள்ளை
எட்டி எட்டிக் கால்களைப் போட்டு
எண்ணி எண்ணியே
நடந்தது மணலில் !



கடற்கரை மணலில் கால்கள் புதைய
களிப்பொடு வந்த
பிள்ளைக்கு, தந்தை
அடுக் கடுக்காக அறிமுகம் செய்தார்
அலையை கடலை
அதற்குள் ளிருக்கும்
பெரும் மீன் வகையை !

மகிழ்ந்தது பிள்ளை
மலர்ந்தது மனமே..!

நல்ல வேளையாய்
வாப்பா அங்கே
சொல்லவே இல்லை
சுனாமி அடித்ததை !

பார்த்தார் காக்கா
சிரித்துக் கொண்டார் !

காக்கா மனசில்
அவரின் வாப்பா!

தொப்பியொடும்
தாடியொடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளிலொரு சால்வையொடும்
அப்படியே மனக்கண்முன்
அவர் நின்றார்
அழகாக!

பச்சைவடச் சிறுவாலில்[30]
பதினாலு வயசில்
வட்டைக்குள் அப்பொழுதே
வாப்பாவொடு சென்ற
அக்காலம் நினைவி லெழ
அவர் மனசு பூத்தார் !
சித்திரமாய்த் துலங்கி வர
தெரிந்த தெலாம் சேர்த்தார்

வாரிக்கா லனையே[31]
வட்டைக்குள்[32] இறக்கி
ஏரினையே பூட்டி அதில்
இழுத் திழுத் தடித்து
சேறெல்லாம் கால் குத்திச்
சிக்குண்டு நடந்து
சீர் செய்து பதமாக்கிப்
பண் செய்த காட்சி !

பெரு வகுறன்[33] கால் வயிற்றை



முளை கொண்டு நிரப்பி,
வரவைக்கு[34] வரவை அதைக்
கொண்டு போய் இறக்கி
எறிகின்ற முளை கட்டிக்
கைப் பெட்டி, கொடுத்த
சிறுபருவ நினைவி லவர்
சிந்தையினை இழந் தார் !

குருவிகளை விரட்ட வெனக்
கூலிக்குப் பொருந்தி
ஒரு மூடை நெல் லெனவே
ஊதியமும் பேசி,
வரம்புகளில் மகிழ்வோடு
தொழிலோடு நடந்து
குரல் கம்மக் கத்தியதும்
நினைவில் வரச் சொன்னார்

டய்யோ... ஓ.. டய்யோ...
குருவி வந்த தைய்யோ..
குருவி வந்த தைய்யோ...
பாலக் கடிச்சி பதக்கடையாக்குது
டய்யோ... ஓ.. டய்யோ..

பேணிகளில்[35] கல்வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிற் றினிலே கட்டி
மூலைக்கு மூலை யதைக்
கம்பு களில் நிறுத்தி
கொடிகட்டி நூல் கட்டிக்
கொண்டு வந்து சேர்த்து
பறனி னிலே[36] கொளுவி வைத்து
படுக்கையிலும் ஆட்டி
குருவியினை விரட்டு மந்த
நினைவு வந்து காதில்
மணி யொலிக்க மணி யொலிக்க
மகிழ்ந்த தனைக் கேட்டார்

பச்சைவடச் சிறுவால்[30] - சிவப்பு நிறத்திலான முழங்காலுக்கு கீழ் வரை மறைக்கும் காற்சட்டை ஒத்த ஒருவகை உடை
வாரிக்காலன[31] - எருமை
வட்டை[32] - வயல்
பெருவகுறன்[33] - -சாக்கு
வரவை[34] - வயலினுள் சிறு சிறு துண்டாக பிரிக்கப்பட்ட பகுதி
பேணி[35] தகரக் குவளை
பறன்[36] - வயலில் தங்குவதற்காக கம்புகளால் கட்டப்பட்ட தற்காலிக இருப்பிடம்





11

கடலி லெழும் அலைக ளவை
கரை காண ஓடும்
கரையி லவை குலவியபின்
கடலி னையே நாடும்

ஆணலையே துரத்தி வர
பெண்ணலையும் ஓடி
கரையினிலே முத்த மிட்டுப்
பின்வந்து சேரும்

உரசல்களில் அலைக ளொன்றி
உணர்ச்சி பெறும் போது
சுவையேறிச் சுதியேறிச்
சுழியாகிப் போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதமிவையே கடலி னிலே
நிகழ் வுற்ற போதும்
நினைவுகளில் நவ நவமாய்
கதை வந்து சேரும்

காக்கா கதையாய்
எதை நினைத் தாரோ ?
பார்த்தார் சிரித்தார்
படுத்துக் கொண்டார்

மரத்தில் முதுகைச்
சாய்த்தே இருந்தவர்
மணலில் மெல்லச்
சரிந்து படுத்தார்

அக்கம் பக்கமாய்...
அங்கும் இங்குமாய்...
சற்றுத் தொலைவிலும்
சரிந்த நிலையிலும்
அரிந்து, அரிந்து...
ஆட்கள் இருந்தனர்

பற்றைக்குள் இருந்து



பாய்ந்தது எதுவோ ?
பக்கத்தில் இருந்தோர்
பதறித் துடித்தனர்
சற்றவர் தயங்கித்
தயங்கி தேடினர்

பற்றைக்குள் ளிருந்துதான்
பாய்ந்ததோ ? அன்றேல்
மரத்தில் இருந்துதான்
விழுந்து உருண்டதோ ?
தெரியவே இல்லை
தேடினர் தேடினர் !

காணவே இல்லை
கதைக்கத் தொடங்கினர்
கதை கதையாகவே
கதைத்துக் கொண்டனர்

அந்த நிகழ்வு அவரை அங்கே
வயலின் பக்கம் வளைத்துக் கொண்டது
பன்றி வயலில் பாயும் நினைவு
வந்தது, காக்கா
வயலை நினைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரக் கொள்ளி[37] வெட்டி முறிக்க
வெளியான் மார்கள் வெளிக்கிட் டெழுந்து
ஈறல் காட்டில் இடம்பல சென்று
எடுப்பார் கொள்ளி
எடையது பெரிதாய் !

தீநா[38] போட்டு வெளிச்சம் வைத்து
தினமும் இரவில் கூ....கூ.... போட்டு
காவல் நடக்கும் கலகலப் பாக
கண்கள் மூடாக் காவல் நடக்கும்

'முறுகம்'[39] வந்து கிண்டிக் கிளறி
புரியும் நாசம்
பொறுத்திட லாமா?
வருவார் அதனால் வட்டான[40] இரவில்
அதியாரி[41] யாரும் அவரொடு வருவார்

ஒவ்வொரு வயலிலும் சோதனை இருக்கும்
ஊ... ஊ... போட்டு கத்தியே பார்ப்பார்
பறனில் விளக்குப்
பத்திட வேண்டும்
பதிலுக்கு வெளியான்
ஊ... சொல்ல வேண்டும்



பறனின் மேலே உயரக் கம்பில்
கணவா லாம்பின்[42]
வெளிச்சம் தெரியும்
கொடியேற்றப் பள்ளியின் 'மினாரா'[43] போல
தெரியும் அங்கே
வட்டைக ளெல்லாம் !

வீரக் கொள்ளி பறனின் கீழே
தீநா போட்டு சிவப்பாய் எரியும்
அரண்டு அரண்டு ஊருள மக்கள்
வரவைக ளெல்லாம் வருவார் போவார்

காவல் செய்யும் கடின உழைப்பே
கூடிச் சேர்ந்து செய்வத னாலே
இலேசாய்த் தெரியும்
எளிதாய்ப் போகும் !
இதனைக் காக்கா
எண்ணிப் பார்த்தார்

வீரக் கொள்ளி[37] – வீர மரத்தின் விறகு ∴ வலிமையான விறகு
தீநா[38] – நின்று அனலாய் எரியும் நெருப்பு
முறுகம்[39] - பன்றி
வட்டான[40] - வட்டை விதானை
அதியாரி[41] - வடடை விதானையின் உதவியாள
கணவா லாம்பு[42] - அணைந்து விடாமல் எரியும் விளக்கு
மினாரா[43] - வெளிச்சம் பரவும் உயர்ந்த கோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12**



முதுகில் வலியெனச்
சொல்லவே இல்லை
முந்திக் கொண்டது
நுளம்பு !

ஊசி போட்டது,
உறிஞ்சிக் குருதியை
எடுத்துக் கொண்டது
பரிசோ திக்கவோ ?



காதில் வந்து 'கிணு கிணு'த்தது
காசு கேட்டதோ
நுளம்பு.
சொறிந்தார் காக்கா
புரண்டு படுத்தார்

அழுதே விட்டது வானம்
கடலின் நீரைச் சொருகி இருந்த
மேக இமைக்குள் தூசுகள் படிய...
அழுதே விட்டது வானம்
சிறு சிறு தூறல்

எழுந்தார் காக்கா
இருப்பிடம் செல்லவே...

பரபரப் பிருந்தது இன்னும் !
பாய்ந்ததா உருண்டதா ?

பாய்ந்த தாகவே
பகர்ந்தனர் சிலபேர் !
உருண்டதாய்ச் சிலபேர்
உறுதிப் படுத்தினர் !
பற்றைக்குள் ளிருந்து
பாய்ந்ததா அன்றேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தில் இருந்து
விழுந்து உருண்டதா?

உருண்டது தா னெனில்
உண்மைதான் அதுதான்
அதுதான்...

வயோதிபர் ஒருவர்
முன்னால் வந்து
விளக்கம் சொன்னார் !

முன்னொரு நாளில்
நடுநிசிப் போதில்
பனங்காய் விழுந்ததாய்ச்
சத்தம் கேட்டதும்
ஓடிச் சென்று
எடுக்க முனைந்ததும்...

உருண்டு உருண்டு
பனங்காய் சென்று
பனையிலும் உருண்டு
இருந்த இடத்தில்
ஒட்டிக் கொண்டதும்



காயினை எடுக்கத்
தொடர்ந்த வயோதிபர்
'பேய்' எனக் கத்தி
வீழ்ந்து கிடந்ததும்
அங்கே
கதையாய் விரிந்தது
பீதி சிலரின்
முகத்தில் தெரிந்தது

ஓரமாய்
ஒரு மட்டையின் கீழே
பட்டுத் தெறித்த
புச்சுத் தேங்காய்
மறைந்து கிடந்து,

காக்கா செல்கையில்
பல்லைக் காட்டி
இளித்ததைக் கண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13



"மெசின் வரல்ல யாக்கும்
என்னாக்கா"
முந்திக் கேட்ட அந்த நபரே
பின்னரும்..
திரும்பும் வேளையில்
திரும்பக் கேட்டார்

ஆமாம் என்ற கருத்தில் தலையை
மேலும் கீழுமாய் அசைத்தார் காக்கா



வட்டைக்குள் மெசின் வந்து
இறங்காத காலம்
மொத்தமாய் ஆள் உழைப்பை
நம்பிய அக் காலம்
தத்தி[44] வைத்து ஆள் சேர்த்து
கதிர் அறுத்த காலம்
இப்பொழுது நினைவு வர
இவர் மகிழ்ந்து போனார்

முளக் கம்பைக்[45] கைக்கொண்டு
மோனையுமே[46] வருவார்
அளந்தளந்து பங்கு களை
ஆட்களுக்காய்ப் பிரிப்பார்
குடுதி[47] வைத்து எல்லையினை
வரையறை யே செய்து
முறை முறையாய் வெட்ட வென
வழி செய்து வைப்பார்

வெட்டி வைத்த கதிர்ப்பிடியை
உப்பட்டி[48] யாக்கி
கட்டுகளில் சேர்த்து வைக்க
பெண்டுகளும் உதவ
பக்குவமாய் தலை யேற்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத்தைச் சுமந்து
கொட்டாமல் சிந்தாமல்
கொண்டு வந்து சேர்ப்பார்

களவெட்டி வெளிசாக்கி[49]
இட மொன்றைத் தெரிந்து
பொருத்தத்தை வெளியானே
பலதடவை பார்த்து
அறிவிப்பார் போடியிடம்
அவர் பறனில் இருந்தே
உறுதி செய்வார்: களவெட்டி
ஊர்ஜிதமாய்ப் போகும்

தத்தி[44] - வேளாண்மை அறுவடை செய்வோரின் அமைப்பு
முளக் கம்பு[45] - வேளாண்மையை அளந்து கொடுப்பதற்காக உபயோகிக்கும் கம்பு
மோனை[46] - தத்தியை முகாமை செய்பவர்
குடுதி[47] - ஒவ்வொருவரும் வெட்ட வேண்டிய எல்லையை குறிப்பதற்காக மோனைக்காரரால் நெறகதிர்களால் போடப்படும் முடிச்சு
உப்பட்டி[48] - கதிர் பிடிகளின் ஒரு தொகை
களவெட்டி வெளிசாக்கி[49] - சூடு வைக்கும் இடத்தை தெரிந்து துப்பரவாக்கி ஆயத்தப்படுத்துதல்





14

காவல் நடக்கும்:
களவெட்டிக் காவல்
மந்திரம் தெரிந்தோர்
முணுமுணுப் பார்கள்
மற்றவ ரெல்லாம்
பாத்திருப் பார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஆ[50] ஓதத் தெரிந்தோர்
உரத்தோது வார்கள்
அமர்ந் திருப் போர்கள்
ஆமீன்[51] சொல்வார்கள்

காவல் நடக்கும்
களவெட்டிக் காவல்

'வெட்டுவாயன[52] மூலைக்கு மூல
நிப்பாட்டி வச்சா
பூதம் வராது
பொலி குடிக்காது'

நம்பினார் காக்கா
நம்பிக்கைதான் வாழ்க்கையோ
நடந்தார்.

இருண்டே இருந்தது
வானம் !
சிறுசிறு தூறல்
பெரிதாக வில்லை
வயலில் இருந்து, அவர்
மனம் மீள வில்லை



வாரிக்காலனை மெதுவாய்
இறக்கி
வளைத்து வளைத்து சூட்டை
மிதித்து
வேலைக்காரனைக்[53] கையில்
எடுத்து
வெளிவரும் கதிர்களை வாட்டிப்[54]
பிடித்து
பொலிக்கொடி[55] போகாமல் கவனமாய்ப்
பார்த்து
கூழனைக்[56] கூட்டிக்
குவித்தெடுப் பாரே

ஆளொருவர் அவரியினில்[57]
வளம் பார்த்து நிற்க
கூழனொடு குஞ்சுவாயன்[58]
கரங்க ளெலாம் மாறி
ஏறியவர் கரங்களிலே
இடறாமல் சேர்வான

கூழனதைக் கழித்து விட
இரணமணி[59] சேர்க்க
காற்றினிலே திசை பார்த்து
தூற்றிடுவார் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைமாறு[60] தூசுதட்டக்
காத்திருப்பாள் கீழே
விட்டுவிட்டு பொலியை அவள்
தடவிவிடு வாளே
கச்சிதமாய் : புத்துணர்வே
பெற்றதுவாய் நெல்லும்
பட்டென்று பளிச் சிடுமே
பரவசமே பார்த்தால் !

கணக்கன்[61] இனி வருவானே
அளந்தளந்து கொட்ட
லாபம்[62] அவணம்[63] எனக்
கணக்கிட்டுப் பிரிப்பான்
பெருவகுறன் நிமிர்ந் திடுவான்
வயலெல்லாம் நிற்பான்

அழகான காட்சியது
அதை எண்ணுந் தோறும்
மலர்ந் திடுமே மனப் பூங்கா
மகிழ்ந்தாரே காக்கா

பறனினிலே உட்கார்ந்து
பார்த்திருப்பார் போடி



விதவிதமாய் சமைத்து வரும்
வெளியானின் சோறு
பகிர்ந் துண்பார், வெளியானைப்
பாராட்டிக் கொள்வார்
இடையிடையே பெண்டுகளை
இவர் தனகிக் கொள்வார்

சோத்துப் பெட்டியதன்[64]
சுவை கூடக் கூட
சேர்ந்துவரும் : கட்டுகளும்[65]
வெளியானின் பங்காய் !

குருவி மூலைக்குள்[66]
இன்னுமொரு கட்டு
விரட்டியவர் பங்காக
வந்தங்கு சேரும்
உப்பட்டி புரட்டி விடும்
பெண்டுகளுக் கென்றும்
ஒரு கட்டோ இரு கட்டோ
தருவாரே போடி

விளைச்சலிலே கணக்கிட்டு
முதலுக்கு என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலவணம் ஏக்கருக்கு
கழித்துவிட்டுப் பிரிப்பார்
நாலிலொரு பங்குவந்து
வெளியானைச் சேரும்
நல்லதொரு வாழ்க்கையது
நினைத்தாரே காக்கா

பெறுகின்ற கூலியதன்
பெறுமானத் தாலா ?
அடைகின்ற இன்பத்தின்
அளவுகளி னாலா ?

தொழி லொன்றின்
உயர்ச்சி யெது
பெருமைதான் என்ன
வினாவொன்றை எழுப்பி, அவர்
விடை கண்டு கொண்டார்

இலயித்து, அவர் மனம் சுவைத்து
வாழ்ந்திட்ட வாழ்க்கை
விலகியதாய், விட்டு விட்டு
நழுவியதாய் உணர்ந்தார் ?
கலங்கி விட்டார்... மனசினிலே



கவலை வர நொந்தார்
இயந்திரமாய்ப் போனதிந்த
வாழ்க்கை என வெந்தார்

இருண்டே இருந்தது
இடி இடித்தது
ஒப்பாரி வைத்தே அழுதது வானம் !

ஓடிச் சென்றே
ஒதுங்கினார் காக்கா
தகட்டுக் கூரைத் தாழ்வாரத்தே...

– () –

துஆ[50] – பிரார்த்தனை
ஆமீன்[51] - இறைவனிடம் "ஏற்றுக் கொள்வாயாக" என வேண்டுவது
வெட்டுவாயன்[52] - மண்வெட்டி
வேலைக்காரன்[53] - சூடடிப்போர் கதிர்களை இழுக்கவும் வாட்டவும் உபயோகிக்கும் கொளுவக்கூடிய கம்பு
வாட்டுதல்[54] - நெற்கதிர்கள் களவெட்டியில் இருந்து வெளியேறாமல் வேலைக்காரனால் கொளுவி பிடித்து அடித்து நெல்மணிகளை வேறாக்கி பிரித்தல்
பொலிக்கொடி[55] –நெற்கதிர்கள் இருக்கின்ற வைக்கோல்
கூழன்[56] - வைக்கோல் துகள்கள், தூசி, மண் என்பவை நிறைந்திருக்கும் நெற்குவியல்
அவரி[57] - மூன்று கம்புகளை வைத்து வைக்கோலினால் கட்டப்பட்டு தூற்றுவதற்காக ஏறி நிற்கும் முக்காலி
குஞ்சுவாயன்[58] - சிறிய கைப்பெட்டி
இரணமணி[59] – நெல்
கட்டைமாறு[60] – தூசி தட்டி துப்பரவு செய்வதற்காக சிறிய மிலாறுகளை வைத்து கட்டப்பட்ட ஓர் உபகரணம்
கணக்கன்[61] -மரக்கால்
லாபம்[62] - ஒன்பதுக்கு பின்னர் பத்து என்பதற்கு பதிலாக லாபம் என்றே சொல்லப்படும்
அவணம்[63] - முப்பது மரக்கால் சேர்ந்தால் அவணம்
சோத்துப் பெட்டி[64] – வெளியானால் போடியாருக்காக விசேடமாக சமைத்துக் கொண்டுவரப்படும் பல கறிகள், பொரியல்களை கொண்ட உணவுப்பெட்டி
கட்டு[65] - உப்பட்டிகள் பல சேர்ந்த நெற்கதிர்களை சேர்த்து கட்டப்பட்டது
குருவி மூலை[66] – குருவிகள் அதிகம் வந்து நெல் கொறித்த பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசனைக் குறிப்புக்கள்

இரண்டு..

குறிப்பு - ஒன்று

"கொந்தளிப்பு" என்றொரு குறுங்காவியம் பாலமுனை பாறுக் அவர்களது உன்னத படைப்பு.

இங்கு இவருடைய தனித்துவமான கவிதா ஆளுமை பளிச்சிடுகின்றது. இவருக்கே உரித்தான ஒரு அற்புதமான நடையில் கவிதைகள் நகருகின்றன.

ஓசை, இயைபு, சொல்லாட்சி,ஓடும் நதி போற் பா அமைதி மிகவும் அற்புதமாக இருக்கின்றது.

"ஆழிக் கடலெனும் அழகுப்பெண்ணாள்
நீலச் சேலை அணிந்தே இருந்தாள்..!
வெள்ளைக் கரையொடு வண்ணச் சேலை".

கொள்ளை அழகு... கொள்ளை அழ்கு...! என்ற நயம் மிக்க முதலாவது கவிதையுடன் கொந்தளிப்பினுள் நுழைந்த நான் இறுதியாக...



"இருண்டே இருந்தது இடி இடித்தது.
ஒப்பாரி வைத்தே அழுதது வானம்.!
ஓடி சென்றே ஒதுங்கினார் காக்கா.
தகட்டுக் கூரைத் தாழ்வாரத்தே"!

என்ற இறுதிக் கவிதை வரை படித்தேன். சுவைத்தேன். பல்விதமான மனோலயங்களை அனுபவித்தேன்.

ஆதம் காக்கா என்றொரு கதாபாத்திரத்தின் ஊடாக வாசகர்களுக்கு எடுத்து காட்டும் சமூக முரண்பாடுகள் ஏராளம். சாதாரணமாக.... நாட்டார் பேச்சு வழக்கிலேயே கவிதை செல்கிறது.

"வாரிக் காலனை மெதுவாய் இறுக்கி
வளைத்து வளைத்து சூட்டை மிதித்து
வேலைக் காரனைக் கையிலெடுத்து...
வெளிவரும் கதிர்களை வாட்டிப் பிடித்து
பொலிக் கொடி போகாமல் கவனமாய் பார்த்து
சூழனைக் கூட்டிக் குவித் தெடுப்பாரே"

எனவரும் கவிதை போன்ற பல வேறுபட்ட நாட்டார் மொழி நடை ரசனை மிக்கவை.

முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் ஒரு கிராமம். இது கிழக்கே நெய்தல் மேற்கே மருதம் சூழ்ந்த பிரதேசம். ஆதம் காக்கா கடந்த சுனாமியினால் மனைவி, மக்களைப் பறி கொடுத்த ஒரு நெய்தல் நிலவாசி. அவரது தொழில் கடலும் கடல் சார்ந்த பகுதியிலும், வயலும் வயல் சார்ந்த பகுதியிலும் அமைந்திருந்தது. இவ்வாறன ஒரு பிரதேச வாழ்வியலை மிக நுணுக்கமாகப்பட் பிடிக்கின்றார் பாலமுனை பாறுக் அவர்கள்.

இடைக்கிடை வந்து போகும் துறைமுகம் அமைப்பது சம்பந்தமான அரசியல் ஏமாற்றுக்கள். இயந்திர மயமாகிப்போன வயல் வெளியில் தொழிலாளரின் தொழிலிழப்புகள். ஊழல் மோசடி... இவ்வாறு ஒரு சமூகத்தின் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகள் எதிர்நேக்கும் இழப்புகள்... மிகவும் பாராட்டுக்குரியதாக சித்தரிக்கப்பட்டுள்ளமை "கொந்தளிப்பு" ஒரு நிறைவான கவிதை நூல் எனக் கட்டியம் கூறுகின்றது.

கலா பூஷணம் பாலமுனை பாறுக் இன்றைய ஈழத்து இலக்கிய வானில் ஒரு பிரகாசமான தாரகை என்பதே எமது கணிப்பாகும்.

**- கவிஞர் முல்லை வீரக்குட்டி -**

தம்பிலுவில்.



## குறிப்பு - இரண்டு

கவிதைக் கலைப்பயணம் என்பது தொடருந்துப் பயணம் போன்றது. சிலர் ஏறுகிறார்கள் சிலர இறங்குகிறார்கள், சிலரோ அவ்வப்போது ஏறியும் இறங்கியும் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் கம்பீரமாக ஏறி இலக்கை நோக்கி மிடுக்கான பீடுநடை போடுகிறார்கள் இத்தகைய இலட்சியப்பயணம் செய்பவர்களில் ஒருவரே கவிஞர். நாடறிந்த எழுத்தாளர் கலாபூசணம் பாலமுனை பாறூக். இலக்கை நோக்கிய இலக்கியப் பயணத்தில் "பதம்" என்ற (கவிதைநூல்) பயணப்பொதியுடன் ஏறிய பாறூக் பதம் பார்த்து பார்த்துச் சுவைத்து பதங்களைப் பட்டைதீட்டி முழு அனுபவத்தின் வெளிப்பாடாக சந்தனப் பொய்கை என்ற இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணப் பொதியையும் இணைத்துக் கொண்டார். இப்போது "கொந்தளிப்பு" என்ற மூன்றாவது பயணப் பொதியை முதுகில் சுமந்து கொண்டு முன்னே வந்து நிற்கிறார் எமக்காக...

"தென்கிழக்கு இலக்கியமுதுசம்" எனப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய கலாபூசணம் கவிஞர் பாலமுனை பாறூக் அவர்கள் பற்றிய மேதாவிலாசம் என் போன்றவர்களால் எழுதப்படவேண்டிய அவசியமே இல்லை. இலக்கிய நெஞ்சங்கள் ஏகபோக உரிமையுடன் இது எங்கள் சொத்து என்று கொண்டாடக்கூடிய எய்ப்பினில் வைப்புத்தான் இப்போது கிடைத்திருக்கும் "கொந்தளிப்பு" என்கின்ற இந்நூல். முற்றிய கரும்பில் இருந்து மொழிகளைக் கிழித்துக் கொண்டும் துருத்திக் கொண்டும் நிற்கும் முத்துக்கள் சுடர்விடுவது போன்றதான உணர்வை "கொந்தளிப்பு" என்கின்ற இந்நூல் என்னுள் ஏற்படுத்தியுள்ளதை உணர்கிறேன்.

தரிசிப்பதும், யாசிப்பதும் நிறைந்த மனித அவல வாழ்வு அகட்புறக்காரணிகளால் சிதைக்கப்பட்டுச் சின்னாபின்னப்பட்டு நிற்பதனை கலாரசனையுடன் கவிஞனுக்கேயுரித்தான அதி அற்புத கலையழகுடன் கொந்தளிப்பில் கவிஞர் பாறூக் சித்தரித்துள்ள விதம் பாராட்டுக்குரியதாகும்.

கலைநுணுக்க சித்தரிப்புணர்வின் உச்சவெளிப்பாடு கொந்தளிப்பில் கொப்பளிக்கின்றது. இஸ்லாமிய கிராமிய வாழ்வியலின் வெட்டு முகத்தோற்றத்தையும் விளிம்பு நிலை மனிதனான ஆதம்பாவாவையும் குறியீடாகக் கொண்டு எரியும் பிரச்சினையை எம் கண் முன்னாலே கவிதைக் காவியமாக காட்டியிருக்கும் கவிஞர், எம் மனக் தகைகளில் காட்சிவிரிக்கும் சித்திரங்களையும், சிற்பங்களையும் விட்டுச் சென்றுள்ளார். கடலின்



கொந்தளிப்பையும். அதனைக் கண்டவர்களின். காண்பவர்களின் கொந்தளிப்புக்களையும் காணும் போது கொந்தளிப்பு என்கின்ற இந்நூல் முழு வெற்றி பெற்றுள்ளது என்பேன்.

**- நா. செல்வநாதன்** - MA, M.Ed

உதவிக் கல்விப் பணிப்பாளர்
சம்மாந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடல் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலமுனை பாறூக் கல்முனைப் பிரதேசத்திலிருந்து சுமார் நாற்பது வருடங்களுக்கு மேலாக கவிதை எழுதிவரும் குறிப்பிடத்தக்க கவிஞர். பதம், சந்தனப் பொய்கை ஆகிய கவிதை நூல்களின் ஆசிரியர் இவர்.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 1970களில் முனைப்புப் பெற்ற இடதுசாரி சிந்தனைப் போக்கில் கவிதை எழுதத் தொடங்கிய பாலமுனை பாறூக் தான் சார்ந்த சமூகத்தின் துன்ப ஒலியைக் கவிதையாக்கியவர். தான் சார்ந்த சமூகத்தின் ஆன்மீக உணர்வுகளைக் கவிதை ஆக்கியவர். "கொந்தளிப்பு" மூலம் தான் சார்ந்த பிரதேச, சமூக, பண்பாட்டு உணர்வுகளை மொத்தமாக வெளிப்படுத்துகின்றார்.

குறிப்பாக தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம்களின் வாழ்வினைப் புலப்படுத்தும் குறிப்பிடத்தக்கதொரு படைப்பாக பாலமுனை பாறூக்கின் 'கொந்தளிப்பு' அமைந்துள்ளது. துணிச்சலுடன் கவிஞர் எடுத்துரைக்கும் அரசியல், சமூக, சுரண்டலுக்கு எதிரான கருத்துக்கள் வரவேற்கத்தக்கன. கலை நயத்துடன் கவிதை சொல்லும் பாங்கும் விதந்துரைக்கத்தக்கது. இலக்கியத்தின் ஒட்டுமொத்தப் பணியினை தன் படைப்பு மூலம் பாறூக் வெளிப்படுத்தியுள்ளார். பாலமுனை பாறூக்குக்கு நமது பாராட்டுக்கள்!

றமீஸ் அப்துல்லா



ISBN : 978 - 955 - 99311 - 1 - 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org